

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.1.2025) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான ஜப்பான் நாட்டுத் தூதர் ஓனோ கெய்ச்சி அவர்கள் (Mr. Ono Keiichi) சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டுத் துணைத் தூதர் டாகாஹாஷி முனியோ (Mr. Takahashi Muneo), புதுதில்லியிலுள்ள ஜப்பான் தூதரகத்தின் செயலாளர் திருமதி. சுபாகிமோடோ மயுமி (Ms. Tsubakimoto Mayumi), தூதரகத்தின் துணைத் தூதர் திருமதி. யுசாவா நவோகோ (Ms. Yuzawa Naoko) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.1.2025) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் 8 கோடியே 58 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 7 கோடியே 47 இலட்சத்து 21 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 25 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், திருமதி.பெ.அமுதா, இயக்குநர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) க.வீ.முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில், சேப்பாக்கம் மெரினா விளையாட்டுத் திடலில், பிப்ரவரி 14 முதல் 16 வரை நடைபெறவிருக்கும் தலைவர் 72 – கழக அணிகளுக்கிடையேயான மாபெரும் பகல்–இரவு கிரிக்கெட் போட்டியின் அழைப்பிதழை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. வழங்கினார்.

### 1.250 கோயில் திருப்பணிகளை மேற்கொள்ள உயர்த்தப்பட்ட

# நிதியுதவி தலா ரூ.2.50 லட்சம் வீதம் ரூ.62.50 கோடிக்கான வரைவோலைகள்!

## நிர்வாகிகளிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜன. 31 - 1,250 கிராமப்புறத் திருக்கோயில் கள் மற்றும் 1,250 ஆதிதிராவிடர் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக் கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள உயர்த்தப்பட்ட நிதியுதவி தலா ரூ.2.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.62.50 கோடிக்கான வரைவோலைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.01.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில், 2024 - 2025 ஆம் நிதியாண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 1,250 கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில் களில் திருப்பணிகளை மேற்கொள்ள உயர்த்தப்பட்ட நிதியுதவி தலா 2.50 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 62.50 கோடி ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 12 திருக்கோயில்களின் நிர்வாகிகள் மற்றும் பூசாரிகளிடம் திருப்பணிக்கான வரைவோலைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

2021 - 2022 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற மானியக் கோரிக்கையில், "கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி தலா ஒரு லட்சத்தை 2 லட்சம் ரூபாயாக உயர்த்தியும், அதன் எண்ணிக்கையை தலா 1,000 லிருந்து 1,250 ஆக உயர்த்தியும் வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 2021-2022, 2022-2023 மற்றும் 2023 - 2024 ஆகிய நிதியாண்டுகளில் 3,750 கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் 3,750 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 150 கோடி ரூபாய்க்கான வரைவோலைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஏற்கனவே வழங்கப்பட்டன.

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.02.2024 அன்று நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் கூட்டத்தில், "கிராமப்புறத்திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள வழங்கப்பட்டு வரும் தலா 2 இலட்சம் ரூபாய் நிதியுதவியினை ரூ.2.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்" என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனடிப்படையில் 2024 2025 ஆம் நிதியாண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 1,250 கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள உயர்த்தப்பட்ட நிதியுதவி தலா 2.50 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 62.50 கோடி ரூபாய்க்கான வரைவோலைகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று திருக்கோயில்களின் நிர்வாகிகள் மற்றும் பூசாரிகளிடம் வழங்கினார். இதன்மூலம் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்கள் மட்டுமின்றி, கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களிலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பொலிவு பெற்றிடும்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாத்தலிங்க மருதாசல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், சுற்றுலா. பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை எழும்பூரில்

# ரூ.227 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 'ஒருங்கிணைந்த வளாகம்'!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஜன 31 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.1.2025) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த்துறை சார்பில் சென்னை எழும்பூரில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் 227 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த வளாகத்திற்கு (Unity Mall) அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு அரசின் 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "சென்னையில் 4 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான கண்காட்சி அரங்குகளை உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த வளாகம் ரூ.227 கோடி மதிப்பீட்டில் நிறு வப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

**4.54 இலட்சம் சதுர அடி பரப்பளவு**

அதன்படி, சென்னை எழும்பூரில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் 4.54 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் 8 தளங்களுடன் முழுவதும் குளிர்சாதன வசதியுடன் 227 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த வளாகத்திற்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இக்கட்டடத்தின் அடித்தளம் 1 மற்றும் 2இல் 323 கார்கள் நிறுத்தும் வசதியும். கோ-ஆப்டெக்ஸ் காட்சியறையும், தரை தளம் முதல் இரண்டாம் தளம் வரை தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 41 கடைகளும், மூன்றாம் தளம் முதல் ஐந்தாம் தளம் வரை 36 இதர மாநில கடைகளும் (One District One Product Shops), ஆறு மற்றும் ஏழாம் தளங்களில் புத்தாக்க மையம் மற்றும் வடிவமைப்பு அச்சுக்கூடமும், எட்டாம் தளத்தில்

கோ-ஆப்டெக்ஸ் அலுவலகமும் அமைக்கப்படவுள்ளது. மேலும், இவ்வளாகத்தில் உணவுக்கூடம், நான்கு மின் தூக்கிகள் மற்றும் இரண்டு தானியங்கி படிக்கட்டுகள், கழிப்பறைகள், தீயணைப்பு வசதிகள் போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த வளாகமானது, ஒரு மாவட்டம் ஒரு பொருள் முன்முயற்சி யின் கீழ், பொருளாதார வலுவூட்டல் மற்றும் கலாச்சார கொண்டாட்டத்தின் முன்னுதாரணமாக அமையும். இது கைவினைஞர்கள் மற்றும் நுகர்வோ ருக்கு இடையிலான புரிதலை வலுப்படுத்துவதையும், மாநிலத்தின் ஒவ்வொரு மூலையிலி ருந்தும் உள்நாட்டு தயாரிப்புகளைக் காட்சிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண் டுள்ளது. ஒருங்கிணைந்த வளாகம் உள்ளூர் கைவினைத்திறனை மேம்படுத்துவதற்கும் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும் இந்தியாவின் பலதரப்பட்ட கலாச்சாரங்களின் சான்றாகவும் விளங்கும். இந்த வளாகமானது புவியியல் எல்லைகளைக் கடந்து, உள்ளூர் தயாரிப்புகளுக்கு விரிந்த சந்தையினை வழங்குவதோடு, உள்ளூர் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு முக்கிய இடமாக அமையும்.

இந்த நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை செயலாளர் திருமதி.வே.அமுதவல்லி, கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் தீபக் ஜேக்கப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டத்திற்கு மேலும் ரூ.500 கோடி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை,ஜன.31- கலைஞரின் கனவு இல்லம் திட்டத்திற்கு மேலும் ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு செய்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

"கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு ஒரு வீட்டிற்கு ரூ.3,50,000/- வீதம் மொத்தம் ரூ.3500 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கிராமப்புற பகுதிகளில் ஏறத்தாழ 8 இலட்சம் குடிசை வீடுகள் உள்ளதாக "அனைவருக்கும் வீடு" என்ற கணக்கெடுப்பின் வழியாக கண்டறியப்பட்டதன் அடிப்படையில் "குடிசையில்லா தமிழ்நாடு" என்ற இலக்கினை அடையும் பொருட்டு, எதிர்வரும் 2030-ஆம் ஆண்டிற்குள் ஊரக பகுதிகளில் 6 வருடங்களில் 8 இலட்சம் வீடுகள் புதியதாக கட்டித்தர அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி நடப்பு நிதியாண்டில் (2024-25) ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் பரப்பளவு, சமையலறை உட்பட, 360 சதுர அடியாகும். பயனாளிகளின் நிதிச்சுமையை குறைக்கும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் TANCEM சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்டு, துறை மூலம் வழங்கப்படுகிறது.

வீட்டின் கட்டுமானத்திற்கு ஏற்ப தரைமட்ட நிலை, ஜன்னல் மட்ட நிலை, கூரை வேயப்பட்ட நிலை மற்றும் பணிமுடிவுற்ற பின் என நான்கு தவணைகளில் ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கி கணக்கின் (Single Nodal Account-SNA) மூலம் தொகை நேரடியாக பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழ்நாடு அரசால் ரூ.1625.30 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, பயனாளிகளுக்கு வீட்டின் கட்டுமான நிலைக்கு ஏற்ப ரூ.1350.99 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், துறை மூலம் வழங்கப்படும் சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகளுக்கு (Steel) என ரூ.249.86 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.1600.85 கோடி இதுவரை கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு இலட்சம் வீடுகளும் விரைவாக கட்டப்பட்டு வருகிறது. இதனை கருத்தில் கொண்டு, வீடுகளின் கட்டுமான பணிகளை துரிதப்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு மேலும் ரூ.500 கோடி விடுவித்து ஆணை வழங்கியுள்ளது. தற்போது வரப்பெற்றுள்ள ரூ.500 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.2125.30 கோடி பெறப்பட்டு கட்டுமான நிலைக்கு ஏற்ப பயனாளிகளின் வங்கிகணக்கிற்கு நேரடியாக தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிதியாண்டிற்குள் அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தமிழ்நாடு அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட - சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அறிவிப்புகளின்

# அனைத்துப் பணிகளும் இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையும்!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

*சென்னை, ஜன. 31 -* முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று முன்தினம் (29-01-2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராசன் மாளிகையில் உள்ள சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் 2023-2024 மற்றும் 2024-2025ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும், அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைக்கும் திட்டங்கள் குறித்தும், நிறைவு பெற்ற திட்டங்களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும் விரிவான ஆய்வுக்கூட்டம்நடைபெற்றது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 2023-2024 மற்றும் 2024 - 2025 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட 96 அறிவிப்புகளில் 9 பணிகள் நிறைவடைந்தும் மற்ற அனைத்து பணிகளும் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன, அனைத்துப் பணிகளும் வரும் டிசம்பர் 2025க்குள் முடிவடையும்.

குறிப்பாக பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் என 25 பணிகளும், பேருந்து நிலையங்கள் மற்றும் போக்குவரத்து மேம்பாடு என 18 பணிகளும், சமுதாய நலக்கூடங்கள் என 13 பணிகளும், நீர் நிலை மேம்பாடு மற்றும் கட்டமைப்பு என 12 பணிகளும், பள்ளிகள் மற்றும் பிற கல்வி மேம்பாடு என 5 பணிகளும், சந்தை மேம்பாடு என 8 பணிகளும், புனர் வாழ்வு மையங்கள் அமைத்தல் என 3 பணிகளும், கொள்கை ரீதியான 3 திட்டங்கள் என மொத்தம் 87 பணிகள் என அனைத்துப் பணிகளும் வரும் டிசம்பர் 2025க்குள் முடிவடையும்.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியன், ந.ரவிக்குமார், தலைமை நிர்வாக அலுவலர்கள் திருமதி. மு.இந்துமதி, டாக்டர் பிரின்சிலி ராஜ்குமார், கண்காணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வென்ற விளையாட்டு வீரர்கள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஜன. 31 - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.1.2025) தேசிய அளவிலான குதிரையேற்ற போட்டிகளில் பதக்கங்களை வென்ற வீரர், வீராங்கனைகள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வில், நவம்பர் 2024 பெங்களூரில் நடைபெற்ற உலக குதிரையேற்ற (Equestrian) கூட்ட மைப்பின் உலக ட்ரெஸ்ஸேஜ் சாலஞ்ச் போட்டியின் (Federation Equestre Internationale's World Dressage Challenge) யூத் பிரிவில் தங்க பதக்கம் வென்றதன் மூலம் ஆசியாவின் சிறந்த யூத் ரைடர் (Best Youth Rider) என்ற பட்டத்தையும் உலக குதிரையேற்ற தரவரிசையில் ஐந்தாம் இடமும் பிடித்த தமிழ்நாடு வீராங்கனை செல்வி. மிராயா தாதாபோய் அவர்களுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்தார்.

தொடர்ந்து, மகாராஷ்ட்ரா மாநிலம் நாக்பூரில் 17.1.2025 முதல் 21.1.2025 வரை நடைபெற்ற 69 வது ஜூனியர் தேசிய பூப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாடு பெண்கள் அணி வீராங்கனைகள் துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

மேலும், மலேசியாவில் 10வது ஆசிய பசிபிக் காதுகேளாதோர் போட்டிகளில் கலந்துகொள்ள தமிழ்நாடு காதுகேளா தோர் சங்கத்தின் சார்பில் நிதியுதவி கேட்டுக்கொண்டதற்கிணங்க, 16.11.2024 அன்று தமிழ்நாடு சாம்பியன் அறகட்டளை மூலம் தலா ரூ.20,000/ வீதம் 11 வீரர், வீராங்கனை களுக்கு தமிழ்நாடு துணை முதல மைச்சர் அவர்கள் ரூ.2,20,000/நிதியுதவி காசோலைகளை வழங்கி வாழ்த்து தெரிவித்து வழி அனுப்பிவைத்தார். இப்போட்டியில் 4 தங்கம், 6 வெள்ளி மற்றும் 4 வெண்கல பதக்கங்கள் வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை நேற்று சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

தொடர்ந்து, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் 28 மாவட்டங்களில் செயல்படும் 39 விளையாட்டு விடுதிகளில் பயில்கின்ற 2,400 மாணவ மாணவிகளுக்கு உயர்ரக ட்ராக் சூட் மற்றும் இரண்டு டிஷர்ட்டுகளை வழங்குவதன் அடையாளமாக சென்னை நேரு விளை யாட்டரங்க விளையாட்டு விடுதியைச் சேர்ந்த 8 மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் விளையாட்டு சங்கங்களின் நிர்வாகிகள், பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.

### ஈ.சி.ஆர். சாலையில் நடந்த சம்பவம் தொடர்பாக

# குற்றவாளிகளைக் கைது செய்ய விரைந்து நடவடிக்கை!

## தாம்பரம் மாநகர காவல்துறை விளக்கம்!

*சென்னை, ஜன. 31 -* ஈ.சி.ஆர். சாலையில் ஒரு காரில் சென்ற பெண்களை வேறொரு காரில் சென்ற ஆண் நபர்கள் துரத்திச் சென்று தொல்லை கொடுத்ததாக சில சேனல்களில் வந்த செய்திக்கு விளக்கம் வருமாறு

கடந்த 26.01.2025 அன்று செல்வி சின்னி திலங் என்ற பெண் கானத்தூர் காவல் நிலையத்தில் ஆஜராகி 25.01.2025 அன்று நள்ளிரவு சுமார் 02.00 மணி அளவில் தான் (TN 13S5466) என்ற காரில் முட்டுக்காடு பாலம் அருகே வந்த போது இரண்டு கார்களில் (TN 75E6004, TN09BR9988) வந்த 78 நபர்கள் திடீரென வழி மறித்துள்ளனர்.

அங்கு நிற்காமல் தனது வீட்டிற்குச் சென்ற செல்வி சின்னி திலங் என்பவரை இரண்டு கார்களில் வந்த நபர்கள் துரத்திச் சென்று கானத்தூரில் உள்ள அவரது வீட்டருகே நிறுத்தி பிரச்சனை செய்து அவர்களது காரை செல்வி சின்னி திலங் என்பவர் கார் இடித்து விட்டு நிற்காமல் சென்றதாக கூறி உள்ளார்கள்.

மேலும் மேற்படி காரை இடித்துவிட்டு நிற்காமல் சென்றதற்காக செல்வி சின்னி திலங் என்பவர் வந்த காரை துரத்திய தாகவும் அந்த பிரச்சனையை தீர்த்து வைப்பதற்காக வந்த தாக கூறியதை செல்வி சின்னி திலங் தரப்பு மறுத்துள்ளது.

மேற்படி புகாரின் பேரில் கானத்தூர் காவல்நிலைய மனு ரசீது எண் 22/2025 நாள் 26.01.2025 வழங்கப்பட்டு, விசாரணை மேற்கொண்டு தொடர்ந்து கானத்தூர் காவல் நிலைய குற்ற எண். 16/2025 u/s 126(2), 296(b), 324(2), 351(2) BNS r/w 4 of TNPHW Act பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. மேற்படி குற்றவாளிகளை விரைந்து கைது செய்யவும் குற்றவாளிகள் பயன்படுத்திய கார்களை பறிமுதல் செய்யவும் அதன் தொடர்சியான ஈ.சி.ஆர். சாலையில் உள்ள சி.சி.டி.வி. காட்சிகளை ஆய்வு செய்து துரித புலன்விசாரணை செய்ய மூன்று தனிப்படைகள் அமைக்கப்பட்டு புலன்விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.